மடீட்சியாவின் இன்ட்எக்ஸ்போ 2018
தொழில் கண்காட்சி
20—23 டிசம்பர் 2018
ஐடா ஸ்கட்டர் அரங்கம், மதுரை

**கண்காட்சி அறிக்கை**

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கடந்த 44 ஆண்டுகளாக மதுரை மாவட்ட சிறு, குறுந்தொழில்களின் சங்கம் (மடீட்சியா) சிறு மற்றும் குறுந்தொழில் துறைக்கென சிறப்பாக செயலாற்றி வருகின்றது.

மடீட்சியாவின் 4வது தொழிற்கண்காட்சி 2018 கடந்த டிசம்பர் மாதம் 20 முதல் 23 வரை மதுரை வேலம்மாள் மருத்துவகல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஐடா ஸ்கட்டர் அரங்கில் நடைபெற்றது. மடீட்சியா, தேசிய சிறு தொழில் கழகம் (NSIC), சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம் (MSME), தொழில்கள் மற்றும் வணிக இயக்குநரகம் (DI & C), தமிழ்நாடு சிறு தொழில்கள் மேம்பாட்டு கழகம் (TANSIDCO), தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறவனம் (EDII) மற்றும் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி (SIDBI) ஆகியோருடன் ஒருங்கிணைந்து இந்த கண்காட்சி நடத்தியது. தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி மற்றும் டி.வி.எஸ் ஸ்ரீசக்ரா டயர்ஸ் நிறுவனம், மதுரை ஆகியவை இந்த தொழிற்கண்காட்சிக்கு உபயதாரராக இருந்தனர்.

நான்கு நாட்கள் நடைபெற்ற கண்காட்சியின் துவக்க விழாவில் மடீட்சியா தலைவர் திரு.K.P.முருகன் வரவேற்புரை ஆற்றினார், சிறப்பு விருத்தினராக மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு.P.பெஞ்சமின் கண்காட்சி மலரை வெளியிட்டு துவக்கவுரையாற்றினார், மதுரை மாவட்ட ஆட்சியர் முனைவர்.S.நடராஜன் இ.ஆ.ப கண்காட்சி மலரை பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். மேலும் டான்சியா தலைவர் திரு.S.அன்புராஜன், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி நிர்வாக இயக்குநர் திரு.K.V.இராமமூர்த்தி அவர்களும் வாழ்த்துரை வழங்கினர், கண்காட்சி தலைவர் திரு.J.அசோக் கண்காட்சி குறித்து விளக்கமளிக்க, கண்காட்சித் துணைத்தலைவர் திரு.A.கஜேந்திரன் கண்காட்சியின் ஒரு பகுதியாக நடைபெறவுள்ள கருத்தரங்குகள் குறித்து விளக்கமளித்தார்.

கண்காட்சியில் (குறுந்தொழில் நிறுவனங்கள் —84, சிறுதொழில் நிறுவனங்கள்—60, நடுத்தர தொழில் நிறுவனங்கள்—15, பெண்தொழில் முனைவோர்—8 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி தொழில் முனைவோரின் அரங்குகள்—13) என மொத்தம் 180 அரங்குகள் காட்சிப்படுத்தப்பட்டன.

General Engineering, Auto Components, Fabrication Welding, Cutting Equipment's, Industrial Automation, Hydraulics & Pneumatics, Machine Tools, Agro Equipment's, Hand Tools, Electric Power, Plastic Machinery & Products, Rubber Machinery and Products, Food Based Equipment's, Printing & Packaging and Electrical & Electronics, Non-Conventional Energy Sources from all over India Participated in this fair.

இந்த கண்காட்சியை மேலும் மெருகூட்ட பல்வேறுபட்ட கருத்தரங்குகள் நடத்தப்பட்டன :

கடந்த 21.12.18 அன்று காலை 11.30 மணிக்கு இன்ட்எக்ஸ்போ கண்காட்சியில் “Export Opportunities in Engineering Products” குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சிறப்புரையாற்ற Engineering Export Promotion Council, Chennai இயக்குநர் திரு.C.H.நாடிகர் அவர்களும் Export Credit Corporation மதுரை கிளையின் மேலாளர் திரு.B.செல்வராஜ் அவர்களும் மற்றும் மதுரை வெளிநாட்டு வர்த்தக

மேம்பாட்டு அதிகாரி திருமதி. விஜயலட்சுமி அவர்களும் ஏற்றுமதி முறைகள், ஏற்றுமதி மேம்பாட்டிற்கான திட்டங்கள் குறித்து விளக்கினர்.

அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு "PSB Loans in 59 Minutes" குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் கனராவங்கியின் பொது மேலாளர் திரு.P.பரமசிவம் அவர்களும், மாவட்ட முன்னோடி வங்கியின் துணை பொது மேலாளர் திரு.மகேந்திரன் அவர்களும் மாவட்ட முன்னோடி வங்கியின் மதுரை மேலாளர் திரு.K.அறிவழகன் அவர்களும், சிறு தொழில் வளர்ச்சி வங்கியின், மதுரை கிளை துணை மேலாளர் திரு.ப.லோகேஷ் அவர்களும் கலந்து கொண்டு திட்டம் குறித்து விளக்கினர்.

கடந்த 22.12.18 அன்று காலை 11.00 மணிக்கு "Recent Trends in Food Processing Sector and Its Opportunities" எனும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தஞ்சாவூர் IIFPT—ன் உதவிப் பேராசிரியர் டாக்டர் S.ஆனந்தகுமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கடந்த 23.12.18 அன்று காலை 11.30 மணிக்கு "Energy Audit and Conservation" எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சிறப்பு விருத்தினராக மதுரை KLN பொறியியல் கல்லூரி பேராசிரியர் திரு.S.வெங்கடநாராயணன் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

**நிறைவு விழா**

கடந்த 22.12.2018 அன்று மாலை 5.00 மணிக்கு இன்ட்எக்ஸ்போ கண்காட்சியின் நிறைவுவிழா நடைபெற்றது. மடீட்சியா தலைவர் திரு.K.P.முருகன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தனராக மாண்புமிகு தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.R.B.உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு நிறைவுவிழா உரையாற்றினார்.கண்காட்சி தலைவர் திரு.J.அசோக் அவர்கள் கண்காட்சி அறிக்கையை சமர்ப்பித்தார் கடந்த மூன்று நாட்களில் ரூ.40 கோடிக்கு வியாபார பரிவர்த்தனை நடந்துள்ளது, தமிழ்நாடு, கேரளா மற்றும் பெங்களூரில் இருந்தும் கண்காட்சியை காண சுமார் 20,000 பார்வையாளர்கள் வந்துள்ளனர், மேலும் ஊடக நண்பர்களுக்கு இந்த கண்காட்சியை சிறப்பாக வெற்றியடைய செய்தமைக்காக நன்றி தெரிவித்து கொண்டார். மேலும் வேகமும், விவேகமிக்க 15 உறுப்பினர்கள் அடங்கிய புத்தாக்கமிக்க கருத்துக்களை கொண்ட குழுவின் விடா முயற்சியின் சாதனையே இந்த கண்காட்சி என்பதில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்த மாபெரும் வெற்றிக்கு அடிகோலியவர்கள் கண்காட்சித் தலைவர் திரு.J.அசோக், துணைதலைவர்கள் திரு.A.கஜேந்திரன் மற்றும் திரு.M.இளங்கோ மற்றும் திரு.J.M.யாஷிக் ஆகியோர் என மகிழ்வுடன் தெரிவித்தார்.